## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
## CC. No. 271 /2021

2026–ம் ஆண்டு மே மாதம் 19–ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 4 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சர்மிளா | தொழில் | | **வீட்டுக்குடித்தனம்** |
| க/பெ. | : | **செந்தில்குமார்** | ஊர் | | ஓலைதேவராயன்பேட்டை |
| வயது | : | 29 /26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**19.05.2026**

3**வது எதிரி இறப்பு**. 1,2 4 **முதல்** 6 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

1) நான் ஓலைதேவராயன்பேட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் தெரியும். 1வது எதிரி எனது அக்காவின் கணவர். மற்றவர்கள் அவரது உறவினர். அ.சா.1 எனது அக்கா.

2) சுமார் 8 வருடங்களுக்கு முன்பு எனது அக்காவிற்கும் அவரது கணவருக்குமிடையே தகராறு நடந்ததாக எனக்கு போன் மூலம் சொன்னார். நான் அப்போது திருப்பூரில் இருந்தேன். ஊருக்குள் வந்து காவல்நிலையம் சென்றோம், அதற்குள் அக்கா வழக்கு கொடுத்துவிட்டார். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. தற்போது அக்கா எனது அம்மா வீட்டில்தான் இருக்கிறார். எனது அக்காவை அவரது நாத்தனாரின் கணவரும், அவரது கொழுந்தனாரும் அடித்ததாக என்னிடம் சொன்னார். என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பம்பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது அக்காவிற்கும், மாமாவிற்கும் எப்போது திருமணம் நடந்தது என்று மறந்துவிட்டது. திருமணத்திற்கு பின்னர் எத்தனை வருடங்கள் கழித்து அவர்களுக்குள் பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது. எனது அக்காவை அடித்ததாக சொல்வது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அடித்ததில் எனது அக்காவிற்கு காயம் ஏற்பட்டதாக எனது அக்கா சொல்லவில்லை. எனது அக்காவை அடித்ததாக சொல்லவில்லை என்றும் அதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் நான் எனது அக்காவிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு முன்பு

எதிரிகளுக்கும் எனது அக்காவிற்கும் தகராறு எதுவும் நடந்ததாக என்னிடம் சொல்லவில்லை. நான் எனது அக்காவிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**CC. No. 271 /2021**

2026-ம் ஆண்டு மே மாதம் 19-ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி- (PW- 3 )**-ன் வாக்குமூலம்** (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுமதி | தொழில் | | **வீட்டுக்குடித்தனம்** |
| க/பெ. | : | **இளங்கோ** | ஊர் | | திருவாலம்பொழில் |
| வயது | : | 56 /26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**19.05.2026**

3**வது எதிரி இறப்பு**. 1,2 4 **முதல்** 6 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

1) நான் திருவாலம்பொழிலில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். அ.சா.1ஐ தெரியாது. இளங்கோவன் மனைவியின் தங்கை என நினைக்கிறேன். எங்கள் வீட்டில் நானும் எனது பேரப்பிள்ளைகளும் டிவி பார்த்துக்கொண்டிருந்தபோது எதிரிகள் வீட்டில் சத்தம்கேட்டுக்கொண்டிருந்தபோது வெளியில் சென்று பார்த்தோம், கூட்டமாக இருந்தது. மாமியாருக்கும், மருமகளுக்கும் சண்டை, என்ன சண்டை என்று நான் விசாரிக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள், தகராறுபற்றி எனக்கு தெரியாது என்றுதான் சொன்னேன்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 01.04.2017ம் தேதி 1ம் எதிரிக்கும் அ.சா.1க்கும் திருமணம் நடந்த விபரம் எனக்கு தெரியாது. திருமணமான நாள் முதலே ஆஜர் எதிரிகள் அ.சா.1டம் நகை ,பணம் கேட்டு தகராறு செய்து தகாத வார்த்தைகளால் திட்டி, வீட்டை விட்டு வெளியே அனுப்பிய விபரம் எனக்கு தெரியும் என்று போலிசார் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் இல்லை. தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக , பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.